மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.02/2021
அ.வ.எண்.57/2021

செல்வி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. கோவிந்தம்மாள்
2.கமலா
3. மல்லிகா
4. சண்முகவள்ளி
5. வெங்கடேஸ்வரன்
6. கார்த்திக்
7. பானுமதி
8. சுமதி
9. கல்யாணி
10. கமலா
11. ராஜா
12. சேட்டு
13. பாப்பாத்தி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 05.04.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.இளம்வழுதி அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.N.D.அனந்தபத்மநாபன் அவர்கள் ஆஜராகியும், 3, 10 முதல் 13 ம் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றா தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பாகபிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு சொத்தானது மனுதாரரின் தந்தை சின்னாக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டு, ஜீவனாம்ச சொத்தாக அவரது சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்த நிலையில், கடந்த 2000ம் வருடம் மனுதாரரின் தந்தை சின்னாகவுண்டர் இறந்துவிட்டார். மேற்படி சின்னாக்கவுண்டரின் இறப்பிற்கு பிறகு மனுச்சொத்தை அவரது வாரிசுகளான மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் அனுபவித்து வருகின்றனர்.

(ii) 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள், மனுதாரரின் சகோதரர்கள் ஆவர். மனுதாரரின் காலம் சென்ற மூத்த சகோதரர் அய்யந்துரையின் மனைவி 4ம் பிரதிவாதியும், அவரது வாரிசுகள் 5 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்களும் ஆவார்கள். மனுதாரரின் காலம் சென்ற இளைய சகோதரர் மாதுவின் மனைவி 10ம் எதிர்மனுதாரரும், அவரது வாரிசுகள் 11 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களும் ஆவார்கள்.

(iii) மனுச்சொத்திற்குரிய பட்டாவானது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களின் பெயரில் கூட்டாக உள்ளது. மனுதாரரின் தந்தை சின்னாக்கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு மனுச்சொத்து பாகம் பிரிக்கப்படாமல் கூட்டுக்குடும்ப சொத்தாக இருந்து வருகிறது. மனுச்சொத்தில் மனுதாரருக்கு 1/6 பாகம் உள்ளது. இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் மனுச்சொத்தில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பாகத்தையும் சேர்த்து வில்லங்க பாராதீனம் செய்ய முயற்சித்ததால், மனுதாரர் வழக்கறிஞர் மூலம் பாகம் பிரித்துத் தரக்கூறி சட்டப்படியான அறிவிப்பு ஒன்றை எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பினார்.

(iv) மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்னரும், எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு அவரது பாகத்தை பிரித்துக்கொடுக்க முன் வராத காரணத்தினால், மனுதாரர் பாகபிரிவினை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்து வழக்கு முடியும் வரை மனுச்சொத்தினை எவ்வித வில்லங்க பாராதீனமும் செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) குறிப்பாணையின் பேரில் 1, 2, 4, 5 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

(i) மனு பொய்யானது. உண்மைக்கு புறம்பானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனு சொத்து, சின்னாக்கவுண்டரின் ஜீவனாம்ச சொத்து என்பது தவறானதாகும். மேற்படி சின்னாக்கவுண்டர் தன் வாழ்நாளில் 1987ம் வருடத்திலேயே தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாகபிரிவினை செய்து தன் மகன்களுக்கு இரு சம பாகமாக பிரித்து அளித்துவிட்டார். மேற்படி பாகபிரிவினைக்கு முன்னரே சின்னாக்கவுண்டரின் பெண் வாரிசுகளுக்கு சீர் வரிசைகளுடன் திருமணம் செய்யப்பட்டுவிட்டது.

(ii) ச.எண்.474/9ல் எவ்வித கிணறும் இல்லை. ச.எண்.468/5ல் உள்ள 1.17 ஏக்கர் நிலத்தை இரண்டாக பிரித்து, 57 செண்ட் நிலம் அய்யந்துரைக்கும், 60 செண்ட் நிலம் மாதுவிற்கும் வழங்கப்பட்டு அவர்களது வாரிசுகளுடன் மேற்படி சொத்துக்களை ஆண்டு அனுபவித்து வந்தனர். இந்நிலையில், மேற்படி மாது கடந்த 1993ம் வருடம் இறந்து விடவே அவரது மனைவியான 10ம் எதிர்மனுதாரர் பராமரிப்பிற்காக மேற்படி 60 செண்ட் நிலத்தை 4ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 06.05.1993ம் தேதியில் பதிவு கிரயம் கொடுத்துவிட்டார்.

(iii) சங்கதிகள் இவ்வாறு உள்ள நிலையில் மனுதாரர், மேற்படி 1987ம் வருடத்திற்கு முன்பு செய்யப்பட்ட பாகபிரிவினையை மறைத்தும், அய்யந்துரைக்கு 57 செண்ட் நிலம் பாகம் பிரித்து அளிக்கப்பட்டதை மூடி மறைத்தும், மேற்படி 57 செண்ட் நிலத்தை சின்னாக்கவுண்டர், தன் ஜீவனாம்சத்திற்காக பயன்படுத்தி வந்ததாக பொய்யாக கூறியுள்ளார். எனவே சின்னாக்கவுண்டரின் காலம் வரை மனுச்சொத்தில் மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் கூட்டாக வசித்து வந்ததாக கூறுவது பொய்யானதாகும்.

(iv) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டா தவறானதாகும். மனுதாரருக்கு மனுச்சொத்தில் 1/6 பாகமாக உள்ளது என கூறுவது தவறானதாகும். மனுதாரரும், 10 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களும் மோசடி செய்து தங்களது பெயரில், கூட்டுப்பட்டாவை பெற்றுள்ளனர். 4 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு

மட்டுமே மனுச்சொத்து சொந்தமானதாகும். மனுதாரருக்கோ, 1 முதல் 3 மற்றும் 10 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கோ மனுச்சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை.

(v) மனுச்சொத்தில் 4 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் மட்டுமே சுவாதீனத்தில் உள்ளனர். மனுதாரர், மாதுவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து பாகபிரிவினை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்யாதிலிருந்தே மனுதாரரின் கோரிக்கை தவறானது என்பது தெளிவாகிறது. எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் மனுச்சொத்தானது மனுதாரரின் தந்தை சின்னாக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டு அவர் ஜீவனாம்சமாக பயன்படுத்தி வந்து இறந்துவிட்ட நிலையிலும், மனுச்சொத்தில் மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் கூட்டாக அனுபவத்தில் இருந்து வரும் நிலையிலும், மனுச்சொத்து பாகம் பிரிக்கப்படாமல் இருந்து வரும் நிலையிலும், எதிர்மனுதாரர்கள் மனுச்சொத்தை விற்க முயற்சிப்பதால், மனுதாரர் மனுச்சொத்தில் தனக்கு சேரவேண்டிய 1/6 பாகத்தை பாகம் பிரித்து தரவேண்டும் என்றும், அதுவரை மனுச்சொத்தை பொறுத்து எவ்வித வில்லங்க பாராதீனமும் செய்யக்கூடாதென இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 4 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுச்சொத்து மேற்படி சின்னாக்கவுண்டரால் 1987ம் வருடத்திற்கு முன்பே பாகபிரிவினை செய்யப்பட்டு அவரது இரு மகன்களுக்கும் பாகமாக அளிக்கப்பட்டுவிட்டது என்றும், மேற்படி சங்கதிகளை மறைத்து மனுச்சொத்து சின்னாக்கவுண்டரின் ஜீவனாம்ச சொத்து என பொய்யுரைத்து, மோசடியாக பெறப்பட்ட பட்டாவின் அடிப்படையில், தவறான சங்கதிகளும் மனுதாரரால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என 4 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக பாகபிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் 4 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுச் சொத்து ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், மனுதாரரின் கோரிக்கை மோசடியானது என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இச்சூழ்நிலையில் மனுதாரர் தாவாவில் கோரியுள்ள அதே உறுத்துக்கட்டளை பரிகாரத்தை இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரரால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் பாகபிரிவினை குறித்து இந்நீதமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது, சட்டம் மற்றும் சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம்

ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2023.04.19 16:47:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2023.04.19 16:47:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.